ஹென்றிக் இப்சன் (கி.பி1825-1906)



- ஹென்றிக் இப்சன் ஒரு நோர்வீஜியர். அவர் அவர் வாழ்ந்த கால சமூகப் பிரச்சினைகளைப் பற்றி எழுதினார். மக்களை அவர்களின் சமூக உறவுத் தளத்தில் நின்று ஆராய்ந்தார். அவர்களைப் பாத்திரங்களாகப் பார்த்தார். அவர்களுக்குள்ள அந்நியோந்நியமான உறவுகளின் பின்புலத்திலே வைத்து அவர்களைப் பார்க்கத் தொடங்கினார்.

- அவருடைய நாடகங்கள் உலகப் பிரசித்தமானவை.'சமூகத்தின் தூண்கள் ' (the pillars of society) என்று சொல்லப்படுகின்ற நாடகத்தில் சமூகத்தில் உள்ள முக்கியஸ்தர்கள் எவ்வாறு தமது நலன் காரணமாக தூண்டப்படுகின்றார்கள் என்பதை காட்டினார். அதே வேளை, அவர் மனித மனத்தின் ஆழத்தை பார்க்கின்ற வகையிலும் குடும்ப உறவுகளுக்குள்ளே காணப்படுகின்றன சிக்கலான, சுவாரசியமான, பயங்கரமான உணர்வுகளை வெளிக்கொணர்வதிலும் கவனம் செலுத்தினார். அந்த வகையில் அவரின் இரண்டு நாடகங்கள் உலகப் பிரசித்தமானவை.



www.ikou.lk

- இவரின் முக்கிய நாடகங்களாவன:-The pillars of society, A Doll's House, Ghosts, An Enemy of People, The Wild Duck, The Master Builder, Rosmersholm,Hedda Gabler,Little Eyolf,Joh Gabriel Birkman. அவரது 70வது வயதில், இறுதியாக எழுதிய நாடகம் when we Dead Awaken.

- ஒன்று, கணவன் மனைவியிடையே இருக்கும் குடும்ப உறவைச் சித்தரிக்கும்'டொல்ஸ் ஹவுஸ்' (A Doll's House) என்னும் நாடகம். பொம்மைகளுக்கான வீடு என்பது இதன் கருத்து. இதில் நோறா என்னும் பெண்ணும் அவளுடைய கணவனும் முக்கியம் பெறுகின்றார்கள். நோறாவின் கணவன் தன்னுடைய சுயநலத்திற்காகவே நடந்து கொள்கின்றான். நோறாவைத் தன்னுடைய மனைவியாகச் சந்தோசமாக நடத்துவதெல்லாம் தன்னுடைய சுய அந்தஸ்தை காப்பாற்றிக் கொள்ளவே என்பதை நோறா விளங்கிக் கொள்கிறாள்.இறுதியில் ஒரு இக்கட்டான சூழலில் மாட்டியபோது அவளைப் பேசுகிறான். அவன் எது நடந்து விடுமோ என்று பயந்திருந்தது போல் எதுவும் நடக்காததால் அவளுடன் மீண்டும் சந்தேகமான வார்த்தைகளில் பேச முயல்கிறான். ஆனால், கோபங்கொண்ட நோறா தன்னைத் தன் கணவன் ஒரு பொம்மையைப் போன்று வைத்திருந்ததுடன் , விரும்பிய வேளைகளிற் கொஞ்சுவதும் விரும்பாத வேளைகளில் தூக்கியெறிவதுமாகத் தன்னை நடத்தி வந்துள்ளான் என்பதை உணர்ந்து அவள் வீட்டுக் கதவை அடித்துச் சாத்திக் கொண்டு வெளியேறுகின்றாள்."நாடகம் முடியும் போது அவள் கதவை சாத்திய சத்தம் மேடை முழுவதும் எதிரொலித்துக் கொண்டு இருக்கும் " என்று இப்சன் எழுதுவார்.

